1994 ஜனவரி 5]

எண்ணிக்கையை அதிகரித்து கொடுத்ததிற்காக எங்களது இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என் நன்றியை என் தொகுதி மக்கள் சார்பாக காணிக்கையாக்குகின்றேன். மேலும், பிற்படுத்தப்பட்ட மாணவியர்கள் எண்ணிக்கை அதிகமாக இருப்பதால் புதிய பிற்படுத்தப்பட்ட மாணவியர் விடுதி துவங்க அரசிடம் ஏதேனும் செயற்குறிப்புகள் உள்ளதா என தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகின்ற நிதியாண்டிலே இது பரிசீலிக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 179, திருமதி கவிநிலவு தர்மராஜ், மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

179–

மொடக்குறிச்சி தொகுதியில் சலவைத் தொழிலாளர்களுக்குக் கடனுதவித் திட்டம்

**20925–திருமதி கவிநிலவு தர்மராஜ் :*

மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா --

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், கொந்தளம் கிராமத்திலும் முத்தையன் வலசு கிராமத்திலும் சலவைத் தொழில் செய்பவர்களுக்கு கடனுதவி வழங்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் மற்றும் மீனளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சலவைத் தொழிலாளர்களுக்கு சலவையகம் அமைக்க வங்கிக் கடனுதவியாக ரூ.3500/-ம் அரசு மானியமாக ரூ.1500/-ம் வழங்கப்படுகிறது. மேலும் நடமாடும் சலவையகம் அமைக்க வங்கி கடனுதவியாக ரூ.1400/-ம் அரசு மான்யமாக ரூ.600-ம் வழங்கப்படுகிறது. மேற்கண்ட திட்டம் ஒவ்வொரு மாவட்டத்திலுள்ள முனிசிபாலிடி, ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் பேரூராட்சி தலைமையிடங்களில் உள்ள தகுதியுள்ள சலவைத் தொழிலாளர்களுக்கு மட்டும் வழங்கப்படுகிறது. அவ்வடிப்படையில் மொடக்குறிச்சி தொகுதி கொடுமுடி ஒன்றியம் கொந்தளம் கிராமம் முத்தையன்வலசு கிராமத்தில் உள்ள சலவைத் தொழிலாளர்கள் மேற்கண்ட கடனுதவி பெற வாய்ப்புகள் இல்லை.

திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொடுமுடி ஒன்றியத்திலே

முத்தையன்வலசிலே இருக்கக்கூடிய சலவைத் தொழிலாளர்கள் சட்ட விதிகளின்படி கடன் உதவி பெறுவதற்கு இயலாத நிலையில் இருக்கிறார்கள் என்று தெரிவித்தார்கள். இருந்தாலும் அகத்தூய்மையோடு இந்த அகிலத்தையே தன்னகத்தே வைத்து ஆட்சி நடத்தக் கூடிய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொன்னான ஆட்சியில் புறத்தூய்மைக்காக தங்களுடைய வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்டிருக்கின்ற சலவைத் தொழிலாளர்களை அதிகமாகக் கொண்ட ஒன்றியமாகிய கொடுமுடி ஒன்றியத்திலே கொந்தளம் மற்றும் முத்தையன்வலசு பகுதிகள் அடங்கியிருக்கின்றன. அந்த சலவைத் தொழிலாளர்களின் ஏழ்மையின் காரணமாக முந்தைய ஆட்சியிலே ஒரு சிலர் வாங்கிய கடனை சரிவர கட்ட இயலாத சூழ்நிலையிலே, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய ஆட்சிக் காலத்திலேயும் வங்கியிலே இருப்பவர்கள் பழைய ஆட்சியினுடைய நிலைமையை மனதிலே வைத்துக்கொண்டு இந்த சலவைத் தொழிலாளர்களுக்கு கடன் உதவி வழங்குவதற்கு அனுமதிக்காமல் மறுத்து வருகிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்கண்ட வங்கி அதிகாரிகளுக்கு தக்க அறிவுரை வழங்கி சலவைத் தொழிலாளர்களுடைய இன்னல்களை போக்கக்கூடிய விதத்திலே அவர்களுக்கு கடன் உதவி பெறுவதற்கு ஆவன செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்ட மக்களுடைய பாதுகாவலராகவும் இன்றைக்கு சமூக நீதியை நிலைநாட்டி சமூக நீதி காவலராகவும் திகழ்ந்துக்கொண்டிருக்கின்ற நம்முடைய முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பிற்படுத்தப்பட்ட மக்கள் பொருளாதார மேம்பாடு அடையவேண்டும் என்பதற்காக 'தமிழ்நாடு பேக்வேர்டு கிளாஸ் எக்கனாமிக் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன்' என்று சொல்லக்கூடிய பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் எந்த ஒரு தொழில் செய்தாலும் அது ட்ரேடாக இருந்தாலும் சரி, பிஸினஸ்ஸாக இருந்தாலும் சரி, உற்பத்தியிலே-புரொடக்ஷனிலே ஈடுபட்டு இருந்தாலும் சரி, அவர்களுக்கு மிக மிக குறைந்த வட்டியிலே 6% வட்டியிலே கடன் வழங்குவதற்கு இன்றைக்கு ஏற்பாடு செய்துள்ளார்கள். அந்த அடிப்படையிலே அங்குள்ள சலவையாளர்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ளும் முகமாக அங்கு மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் அவர்களை அணுகி விண்ணப்பத்தை பூர்த்தி செய்து அனுப்பினால் அவர்களுடைய மனுக்கள் பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 180, டாக்டர் மு. சீனியம்மாள், மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.